அழகான அந்த பனைமரம்
அடிக்கடி நினைவுவரும் 2
தமிழ் ஈழ மண்ணே உன்னை
மறப்பேனா நீ என் அன்னை 2

அன்று முற்றத்தில் அளித்து அளித்து நான்
ஆன எழுதிய மண்ணல்லவா 2
இன்று நான் பாடும் பாட்டும்
என் தாய் மண் என்னுள்
இசைக்கின்ற பண்ணல்லவா 2

அழகான அந்த பனைமரம்
அடிக்கடி நினைவுவரும் 2

எங்கு வாழ்ந்தாலும் எனது தமிழ் நெஞ்சம்
இயங்கும் என் தாயின் எண்ணத்திலே 2
அங்கு தமிழ் இனம் துடிக்கும் பொழுதெல்லாம்
ஆறு பாயும் என் கன்னத்திலே 2

அழகான அந்த பனைமரம்
அடிக்கடி நினைவுவரும் 2

எதிரி எங்கள் தாய் மண்ணை அளித்ததாய்
இரவு பகல் நூறு கதை கட்டுவான் 2
அதிரும் புலிகளின் குண்டு வெடி ஓசை
அறிந்த தமிழ் பிள்ளை கை தட்டுவான்

அழகான அந்த பனைமரம்
அடிக்கடி நினைவுவரும் 2

பகைவர் பாயலாம் உடல்கள் சாயலாம்
எனினும் தமிழ் ஈழம் பணியாது 2
அகமும் புறமுமாய் உயிரில் கலந்த என்
அன்னை மண் பாசம் தணியாது 2

அழகான அந்த பனைமரம்
அடிக்கடி நினைவுவரும் 2
தமிழ் ஈழ மண்ணே உன்னை
மறப்பேனா நீ என் அன்னை 2

இசைத்தட்டு : இது நெருப்பின் குரல்
அகம் கலையகம்